**கவனிக்க.**- 2015.02.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III, பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க.**-2010.06.28 ஆந் திகதியிலிருந்து 2013.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான மிருக வைத்தியர்களின் பெயர்ப்பட்டியலொன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி VI இல் ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1902 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13
1902 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 180 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 181 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 186 |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2015, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக வவுனியா மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் - 2015

வவுனியா மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட முச்சக்கர வண்டிகள், மோட்டார் வான் மற்றும் மோட்டார் லொறிகளுக்கான பகிரங்க மூடிய விலைமனுக் கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் "மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், வவுனியா" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம் அல்லது மேல் நீதிமன்றத்தின் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். கடித முகப்பின் மேல் மூலையில் "வவுனியா மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலைமனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனு கோரும் இறுதித் திகதியில் பி. ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கையினை முன்வைக்க முடியும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்பட மாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.

முச்சக்கர வண்டிகள், மோட்டார் வான் மற்றும் மோட்டார் லொறி ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு (100) ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2015, பங்குனி மாதம் 30 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணியுடன் நிறுத்தப்படும்.

### அட்டவணை

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | வழக்கு இல. | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்புக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | முச்சக்கர வண்டி - 1 | Bajaj | 90235 | DC/VAV/01/2015 | 5,000 |
| 2 | முச்சக்கர வண்டி - 1 | Bajaj | 93240 | DC/VAV/02/2015 | 2,000 |
| 3 | மோட்டார் லொறி - 1 | Isuzu TX | 71512 | DC/VAV/03/2015 | 1,000 |
| 4 | மோட்டார் வான் - 1 | Toyota | - | DC/VAV/04/2015 | 1,000 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2015 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற சம்பாத்திய குழுவினால் திறக்கப்படும்.

விலைமனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அவ்வாகனத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற சம்பாத்திய குழு பிறப்பிக்கும். இதன் அடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் வாகனங்களை நேரடியாகச் சமுகமளித்து கடமை நாட்களில் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணி வரைக்கும் வவுனியா மாவட்ட/நீதவான் நீதிமன்றப் பதிவாளருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்திவைப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகன/வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு

ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கொள்வனவு செய்வோர் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தமது தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

மேற்படி மூடிய விலைமனு ஊடான விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் வவுனியா மேல் நீதிமன்றப் பெறுகைக் குழுவுக்கே உரித்தானதாகும்.

அன்னலிங்கம் பிரேமசங்கர்,
மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்றம்,
வவுனியா.

2-391

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் 2015, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் மிர்ரய் (பிறைவேட்) லிமிட்டெட் அதனது பெயரை சீப்வே லங்கா (பிறைவேட்) லிமிடடெட் என மாற்றியுள்ளதென மேற்கூறப்பட்டுள்ள சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : மிர்ரல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 5414
பதிவு அலுவலகம் : ரிங் றோட் 3, ஃபேஸ் II ஈ. பீ. இசட். கட்டுநாயக்க
கம்பனியின் புதிய பெயர் : சீப்வே லங்கா (பிறைவேட்) லிமிடடெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

சீப்வே லங்கா (பிறைவேட்) லிமிடடெட்.

2-444

---

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அக்செஸ் ரியல்டீஸ் ரெசிடென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 103023
கூட்டிணைப்புத் திகதி : 2014, திசெம்பர் 29
கம்பனியின் பதிவு அலுவலகம் : அக்செஸ் டவர்ஸ், இல. 278, யூனியன் இடம், கொழும்பு 2

பீ டபிள்யூ கோர்ப்பரேட் செக்ரடேரியல் (பீவீரீ) எல்ரீடி,
கம்பனிச் செயலாளர்கள்.

2-408

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2014.12.12 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : குட் கர்மா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 102791
பதிவு முகவரி : இல. 59, கிறகரீஸ் றோட், கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-409

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : வயிற் கொலர்ஸ் கோர்ப்பரேட் சொலுயுசன்ஸ் (பீவீரீ) எல்ரீடி
கம்பனியின் இலக்கம் : பீவீ 103475
கூட்டிணைப்புத் திகதி : 2015.01.23
கம்பனியின் பதிவு அலுவலகம் : இல. 439/1, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5

வயிற் கொலர்ஸ் கோர்ப்பரேட் சொலுயுசன்ஸ்
(பீவீரீ) எல்ரீடி என்ற கம்பனிக்காகவும்
அதன் சார்பிலும்,

பி டபிள்யூ கோர்ப்பரேட் செக்ரட்டேரியல் (பீவீரீ) எல்ரீடி.
கம்பனிச் செயலாளர்கள்.

2015, சனவரி 29.

2-447

## பொது அறிவித்தல்

*கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : இன்செல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 103359
*பதிவு முகவரி* : இல. 26/9, வணரத்தன வீதி, கல்கிசை

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்.

ஏ. பி. டபிள்யூ. டி. சில்வா,
பணிப்பாளர்.

இல. 26/9, வணரத்தன வீதி,
கல்கிசை.

2-424

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சீ பீ ஏ சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 193, ஹில் வீதி, தெஹிவளை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, ஏப்பிறல் 7
*பதிவு இலக்கம்* : பீவீ 98054

2-319

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சன்டல் கழம்பு (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 102724
*பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014.12.11

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-322

---

## பொது அறிவித்தல்

பின்வரும் கம்பனி, கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல்படுத்தப்பட்டு கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(3) இற்கு அமைய கம்பனியின் அந்தஸ்தை மாற்ற பங்குதாரர்களால் 2015.01.21 ஆந் திகதி விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பழைய பெயர்* : ஆர்பிகோ இன்சூரன்ஸ் லிமிட்டெட்
*கம்பனியின் புதிய பெயர்* : ஆர்பிகோ இன்சூரன்ஸ் பீஎல்சீ
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 4739
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : இல. 310, ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம

ரிச்சட் பீரிஸ் குரூப் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 310, ஹைலெவல் வீதி,
நாவின்ன,
மஹரகம,
2015, சனவரி 23.

2-400

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : ஏ என் எம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிட்டெட்
*கூட்டிணைப்பின் இலக்கம்* : பீவீ 3564
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 279, மெயின் வீதி, மருதமுனை, கல்முனை
*புதிய பெயர்* : ஏ என் எம் என்ஜினியரிங் லிமிட்டெட்

எம். சீ. எம். நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

2-375

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எக்பிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103066
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014.12.29

*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம்* : இல. 461,
சட்டத்தரணிகள் அலுவலகத்
தொகுதி, வில்லியம்
கொபல்லாவ மாவத்தை,
கண்டி

சிறிவர்தன முதியான்சேலாகே
பத்மா பத்ரா சிறிவர்தன,
கம்பனிப் பணிப்பாளர்.

2-306

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : எஸ்செட் எம்ப்ளோய்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 1750
*பதிவு முகவரி* : இல. 34, வோட் பிளேஸ், கொழும்பு 7
*கம்பனியின் புதிய பெயர்* : எஸ்செட் ட்ரவெல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-324

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லங்கா இன்டர்நஷனல் சைன்டிகேட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103319
*பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸானட்ரா பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.01.19

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-321

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : யூ ஆர் யூ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 103210
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.01.07
*பதிவு முகவரி* : இல. 34, வோட் பிளேஸ், கொழும்பு 7

கம்பனிச் செயலாளர்.

2-323

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : அன்டன் அன்ட் சாமுவேல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 103318
*பதிவு முகவரி* : இல. 47, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.01.19

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-320

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சோமா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 69131
*பதிவு முகவரி* : இல. 54, சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009.09.11

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-318

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : என்ட்லெஸ் அவுட்டோர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 102948
பதிவு முகவரி : இல. 3, விஜயகுமாரதுங்க மாவத்தை, கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.12.19

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2-317

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், என்டிபி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ (NDB Capital Holdings PLC) இன் பெயர் பின்வருமாறு மாற்றியமைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

முன்னைய பெயர் : என்டிபி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ
கம்பனி பதிவு இலக்கம் : பீகியூ 110
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : என்டிபி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ (NDB Capital Holdings Limited)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மயோமி சமரவிக்கிரம,
கம்பனிச் செயலாளர்.

2-275

---

## பொது அறிவித்தல்

ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி
**(பீவீ 78181)**

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஈ செனலிங் பீஎல்சீ (கம்பனி பதிவு இலக்கம் பீகியூ 205) உடன் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி இன் (கம்பனி பதிவு இலக்கம் பீவீ 78181) முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242 ஆம் இலக்க சட்டத்தின் (3)(பி) ஆம் உப பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஈ செனலிங் பீஎல்சீ தொடர்ந்தும் செயற்படவும் ஈசீஎல் சேப்ட் (பீவீரீ) எல்ரீடி முடிவுறுத்தப்படுவதற்காக ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி இன் பணிப்பாளர்களையும் ஈ செனலிங் பீஎல்சீ இன் சபையும் 2015, சனவரி 21 ஆந் திகதி முன்மொழிவொன்றை முன்வைத்தது.

இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 20 வேலை நாட்களுக்கு குறையாத காலத்தில், கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களுடன் ஒன்றிணைப்பு முன்மொழிவின் பதவிற்காக கம்பனிகளின் பதிவாளர் நாயகத்துடன் கோவை செய்வதற்காக ஈ செனலிங் பீஎல்சீ மற்றும் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி ஆகியவை சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகளின் பதிவாளர் நாயகம் ஒன்றிணைப்புச் சான்றிதழை வழங்கிய பின்னர் ஒன்றிணைப்பானது செயல்வலுப் பெறும்.

ஈ செனலிங் பீஎல்சீ மற்றும் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி ஆகியவற்றின் சபைகளினால் ஒன்றிணைப்பை அங்கீகரிக்கும் முன்மொழிவுகளை சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் பிரகாரம் அடக்கியுள்ளதாகக் கருதப்படும் ஒன்றிணைப்பு முன்மொழிவின் பிரதிகள், எந்தவொரு பங்குதாரர் அல்லது கம்பனியின் கடன் கொடுநர் அல்லது கம்பனி கடப்பாடுடைய எந்தவொரு நபர் ஆகியோரும் பரீட்சிப்பதற்காக சாதாரண வேலை நேரங்களில் கொழும்பு 3, புனித அந்தோனியார் மாவத்தை, 18 ஆம் இலக்கத்திலுள்ள "சமர்ட்டி டவர்ஸ்" எனப்படும் கம்பனியின் 1ஜீ என்ற பதிவு அலுவலகத்தில் பரீட்சித்தலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

கம்பனிக் கடனாளியாகவுள்ள ஒரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனி கடப்பாடாகவுள்ள எந்தவொரு நபரும் கம்பனிக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஒன்றிணைப்பு முன்மொழிவின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள உரித்தாவார்.

ஒன்றிணைக்கப்பட்ட ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடீ
பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டட்சுயா கொய்கே,
பணிப்பாளர்.

2015, சனவரி 22.

2-279/1

---

## பொது அறிவித்தல்

ஈ-செனலிங் பீஎல்சீ
**(பீவீ 205)**

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஈ செனலிங் பீஎல்சீ (கம்பனி பதிவு இலக்கம் பீகியூ 205) உடன் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி இன் (கம்பனி பதிவு இலக்கம் பீவீ 78181) முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242 ஆம் இலக்க சட்டத்தின் (3)(பி) ஆம் உப பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஈ செனலிங் பீஎல்சீ தொடர்ந்தும் செயற்படவும் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி முடிவுறுத்தப் படுவதற்காக ஈ செனலிங் பீஎல்சீ இன் பணிப்பாளர்களையும் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி இன் 2015, சனவரி 21 ஆந் திகதி முன்மொழிவொன்றை முன்வைத்தது.

இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 20 வேலை நாட்களுக்கு குறையாத காலத்தில், கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் கூறப்பட்ட ஆவணங்களுடன் ஒன்றிணைப்பு முன்மொழிவின் பதவிற்காக

கம்பனிகளின் பதிவாளர் நாயகத்துடன் கோவை செய்வதற்காக ஈ செனலிங் பீஎல்சீ மற்றும் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி ஆகியவை சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகளின் பதிவாளர் நாயகம் ஒன்றிணைப்புச் சான்றிதழை வழங்கிய பின்னர் ஒன்றிணைப் பானது செயல்வலுப்பெறும்.

ஈ செனலிங் பீஎல்சீ மற்றும் ஈசீஎல் சொப்ட் (பீவீரீ) எல்ரீடி ஆகியவற்றின் சபைகளினால் ஒன்றிணைப்பை அங்கீகரிக்கும் முன்மொழிவுகளை சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் பிரகாரம் அடக்கியுள்ளதாகக் கருதப்படும் ஒன்றிணைப்பு முன்மொழிவின் பிரதிகள், எந்தவொரு பங்குதாரர் அல்லது கம்பனியின் கடன் கொடுநர் அல்லது கம்பனி கடப்பாடுடைய எந்தவொரு நபர் ஆகியோரும் பரீட்சிப்பதற்காக சாதாரண வேலை நேரங்களில் கொழும்பு 3, புனித அந்தோனியார் மாவத்தை, 18 ஆம் இலக்கத்திலுள்ள "சமர்ட்டி டவர்ஸ்" எனப்படும் கம்பனியின் 1ஜீ என்ற பதிவு அலுவலகத்தில் பரீட்சித்தலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

கம்பனிக் கடனாளியாகவுள்ள ஒரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனி கடப்பாடாகவுள்ள எந்தவொரு நபரும் கம்பனிக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஒன்றிணைப்பு முன்மொழிவின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள உரித்தாவார்.

ஒன்றிணைக்கப்பட்ட ஈ செனலிங் பீஎல்சீ
பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டட்சுயா கொய்கே,
பணிப்பாளர்.

2015, சனவரி 22.

2-279/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

| கம்பனியின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு அலுவலகம் |
|---|---|---|
| 1. ஈ பெஸ்ட் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 100365 | இல. 21, சீலரத்ன லேன், கொழும்பு 9 |
| 2. நிமாவின் ஹோல்டிங்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 100961 | இல. 187, முதல் மாடி, வார்ட் பெலஸ், கல்முனை |
| 3. ஏ என் எம் கன்ஸ்ரக்சன்ஸ் | பீபி 3564 | இல. 279, மெயின் வீதி, மருதமுனை, கல்முனை |

எம். சீ. எம். நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

2-374

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சீனர்ட் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைத்தல் திகதி : 2015.01.01
கம்பனியின் இலக்கம் : பீவீ 103151
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 324/1/சீ1, நைவெல, வெயாங்கொடை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

2-264

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

| கம்பனியின் பெயர் | கம்பனியின் இலக்கம் | பதிவு அலுவலகம் | பதிவுசெய்யப் பட்ட திகதி |
|---|---|---|---|
| சக்தி பில்டர்ஸ் அன்ட் டெகரேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 103195 | பன்னன்கா வத்தை, புலோலி தெற்கு, புலோலி, பருத்தித் துறை | 06.01.2015 |

மேற்குறிப்பிட்ட கம்பனிக்காக,

எச். சீ. லக்மினி.

இல. 82சீ, கட்டுவாவல,
பொரலஸ்கமுவ.

2-307

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 20/1, நகர்ப்புற வீடமைப்புத் திட்டம், அப்துல் வஹாப் மாவத்தை, காலி எனும் முகவரியில் வசிக்கும் கிரிங்கொட கமகே சேனாரத்ன ஆகிய நான், காலி மாவட்ட பிரசித்த நொத்தாரிசு நிலந்த ஹெட்டிகே என்பவரால் 2014.09.06 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1792 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணிப் பத்திரத்தினால் இலக்கம் 19/4, சரணங்கர வீதி, வெலிவத்த, காலி எனும் முகவரியில் வசிக்கும் கிரிங்கொட கமகே சிசிர பிரேமரத்ன என்பவருக்கு, எனது அற்றோணித் தத்துவம் 2014, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை அனைவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் அறியத்தருகின்றேன்.

கிரிங்கொட கமகே சேனாரத்ன.

2-314

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சட்டத்தரணியும் பிரதான நொத்தாரிசுமான திருமதி ஆர். ஜே. ஏ. வத்ஸலா குமாரி ஹேரத் என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2586 ஆம் இலக்க 2012.10.12 ஆந் திகதி கொண்ட விசேட அற்றோணி அதிகாரப்பத்திரத்தில் அற்றோணி வழங்குனரான மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் மாலபே, தலங்கம வடக்கு, உடவத்த வீதி, செவன பிளேஸ், 925/5 ஆம் இலக்கத்தில் வசிக்கும் கீகியனகே தொன் பிரியலால் ஆகிய என்னால் அங்கு அற்றோணி பெறுபவரான மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்ட பூஜாபிட்டிய, மாரத்துகொட, 26/2ஏ ஆம் இலக்கத்தில் வசிக்கும் பனன்கல லியனகே மஹிந்த வர்ணசிரி என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை 2014.11.17 ஆந் திகதி முதல் இரத்துச்செய்வதாக இத்தால் அனைவருக்கும் அறிவிக்கப் படுகின்றது.

கீகியனகே தொன் பிரியலால்.

2-373

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொட, விமலவத்த வீதி, 4 ஆம் ஒழுங்கை, 19/4 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அசோக்க நலின் அமரசிங்க ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு மல்லவராய்ச்சிகே ஹேர்மன் பற்றிக் பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, நாவல ஸ்ரீ ரத்னஜோதி மாவத்தை, 31 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சுமேதா அமரசிங்க என்பவருக்கு என்னால் வழங் கப்பட்ட 1999, யூலை 02 ஆந் திகதிய 5169 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லாதொழித்துள்ளேன் எனவும், மேற்கூறப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் அல்லது செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

அசோக்க நலின் அமரசிங்க.

2-305

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

காலி, கலஹா, வன்சாவல ''ரண்கல கார்டின்'' என்ற இடத்தில் வசிக்கும் கலஹெ பதிரனகே மஹிந்த குணவர்தன ஆகிய நான், 2008.01.11 ஆந் திகதி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய பீ. டபிள்யூ. செனவிரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4315 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் மூலம் இல. 33/5, காலி, வெகுணுகொட வீதியில் வசிக்கும் கலஹெ பதிரனகே மாதவ குணவர்தன என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் என பொது மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட இரத்துச்செய்தல் 2015.01.26 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்த வேண்டும் என்றும், அன்று தொடக்கம் அவருடைய எந்த செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் அறியத்தருகிறேன்

கலஹெ பதிரனகே மஹிந்த குணவர்தன.

2-288

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, ருக்மணிதேவி மாவத்தை, 65 ஆம் இலக்கத்தில் வசிக்கும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 763602028V ஐக் குறிக்கும் மனம் ஹிம்கான சந்தின சில்வா ஆகிய நான் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசுக்கும் அறிவிப்பதாவது,

தங்கொட்டுவ, கொடல்ல, 106/3 ஆம் இலக்கத்தில் வசிக்கும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 838125638V ஐக் குறிக்கும் மிசெல் மினோத் டொக் எனும் நபருக்கு பிரசித்திபெற்ற நொத்தாரிசு சுறங்கா பெர்னாண்டோவினால் 2012.03.14 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட 6925 ஆம் இலக்கத்தைக் குறிக்கும் அற்றோணி உறுதிப்பத்திரம் இன்று தொடக்கம் இரத்துச்செய்யப்பட்டு செல்லுபடி யற்றதாக்கப்பட்டுள்ளது என்பதையும் மேற்படி மிசெல் மினோத் டொக் எனும் என்பவரால் செய்யப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

மனம் ஹிம்கான சந்தின சில்வா.

2-256

---

## ஏல விற்பனைகள்

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பகிரங்க ஏல விற்பனை**

**பரப்பளவில் 12 பேர்ச்சுகளைக் கொண்டதும், பிலிமதலாவ, கொழும்பு வீதி, 398 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும், 'அஸ்வெத்தும வத்த' என அழைக்கப் படுவதுமான பெறுமதிவாய்ந்த காணியும் தொழில் வளவுகளும்**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் யட்டிநுவரவின் மடபலாத் கோறளையில் பிலிமதலாவவில் அமைந்துள்ள காணியிலிருந்து அஸ்வெத்தும வத்த என அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. பீ. லன்சகாரநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011, திசெம்பர் 4 ஆந் திகதிய 7518 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட அக்காணித்துண்டு அடங்கலும் ; பின்வருவன, அதாவது மின்சார வழங்கல் சாதனமும் தொலைத்தொடர்புச் சாதனமும் உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் மேற்படி காணித்துண்டுடன் அத்துடன்/அல்லது அதன் மீதுள்ள கட்டிடங்களுடன் இப்போது

பொருத்தப்பட்ட அல்லது நிரந்தரமாக இணைக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் காலத்துக்குக்காலம் பொருத்தப்படக்கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதி இணைப்புக்கள், பொருத்திகள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் ஒவ்வொன்றுடனும் சேர்த்து.

கிறீன் பார்க் ரெஸ்டோரன்ட் என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தனி உரிமையாண்மையில் தொழில் கொண்டுநடாத்து கின்ற பிலிமதலாவையைச் சேர்ந்த காரியவசம் மஜுவம கமகே வசந்த லால் சேனாதீர என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் 2011, திசெம்பர் 30 ஆந் திகதிய 65 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் என்பதுடன், சொல்லப்பட்ட வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2015, மாச்சு 6 ஆந் திகதியன்று மு. ப. 11.30 மணிக்கு மேற்படி ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தினால் அதே இடத்தில் வைத்து விற்பனை செய்வேன்.

**வளவுகளுக்கான அணுகுவழி**.- சம்பந்தப்பட்ட ஆதனத்தை அடைவதற்கு கண்டிப் பட்டினத்திலிருந்து ஏறத்தாழ 11 கிலோ மீற்றர்களுக்கு கொழும்பு பிரதான வீதி வழியாகச் சென்று பிலிமதலாவ பஸார் வரை செல்லவும்.

**மேலதிக விபரங்களுக்காக**.- 2015.01.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும், 2014.12.24 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவுகளைச் செய்யும் முறை**.- ஏல விற்பனை முடிவுற்றதன் மேல் கொள்வனவாளராக வரவுள்ளவர் பின்வரும் பணத்தை காசாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%, (2) உள்ளூராதிகார சபை விதிப்பனவுகளும் அவற்றின் மீதான சேர்பெறுமதி வரியும் 1%, (3) ஏல விற்பனையாளரின் விதிப்பனவுகள் 2 1/2%, (4) விளம்பரக் கட்டணங்களின் முழுச் செலவுகளும், (5) எழுதுவினைஞரினதும் கூவுநரினதும் கட்டணமான 1,500 ரூபா ; (6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்காக நொத்தாரிசுக் கட்டணமான 3,000 ரூபா முதலியன.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, ஏல விற்பனைத் திகதியி லிருந்து 30 நாட்களினுள் செலுத்தப்பட வேண்டும்.

உரித்து உறுதிகளையும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடுவ தற்காக கொழும்பு 2, நவம் மாவத்தை, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீயைச் சேர்ந்த முகாமையாளர், சட்ட அறவீடுகள் என்பவருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல.: 2448448, 011-7448448.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், பெறுமான மதிப்பீட்டாளர்,
பட்டயம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

2-377

**யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் கட்டுநாயக்க-சீதுவ நகரசபை எல்லைக்குள் அளுத்குரு கோரளையின் தசிய பத்துவில் குரான-கட்டுநாயக்கவில் அமைந்துள்ள அம்பகஹவத்த எனக் கூறப்படும் பரப்பளவில் இருபத்தேழு பேர்ச் உடைய (0ஏ. 0று. 27பே.) காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. எஸ். குணரத்னவால் தயாரிக்கப்பட்ட 1964, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 4775 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தின் காணித்துண்டு எனக் காட்டப்பட்டதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டி. என். பீரிஸால் தயாரிக்கப்பட்ட 1998, யூலை மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 1217 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 1 என மீள அளவை செய்து காட்டப்பட்டதும் பரப்பளவில் இருபத்தைந்து தசம் இரண்டு சைபர் (0ஏ. 0று. 25.20பே.) அல்லது 0.0637 ஹெக்டெயரை உடையதுமான அனைத்துக் காணிப்பகுதி. கூறப்பட்ட காணி அதன் பின்னர் மீள் அளவை செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டி. என். பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட 4113 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 1 எனக் காட்டப்பட்டதும் பரப்பளவில் இருபத்தைந்து தசம் இரண்டு சைபர் பேர்ச்களை (0ஏ. 0று. 25.20பே.) அல்லது 0.637 ஹெக்டெயர்களை உடையதும் ஆகும். (சீ812/182 காணிப்பதிவு அலுவலகம், நீர்கொழும்பு).

நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. ஏ. எல். பீ. தம்மிக சில்வாவால் உறுதிப்படுத்தப்பட்ட தீபல் அரவிந்த கொலம்பகே ஈடுவைப்பாளராக உள்ள 2010.03.01 ஆந் திகதிய 1248 ஆம் இலக்கமுடைய முதலாவது ஈட்டுமுறி 2010.12.13 ஆந் திகதிய 1379 ஆம் இலக்க இரண்டாவது ஈட்டுமுறி மற்றும் 2011.11.18 ஆந் திகதிய 1621 ஆம் இலக்கமுடைய மூன்றாவது ஈட்டுமுறி ஆகியவற்றுக்கேற்ப கூறப்பட்ட தீபல் அரவிந்த கொலம்பகேயால் கொழும்பு 3, காலி வீதி, 64 ஆம் இலக்கத்தில் உள்ள யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீயில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி வசதிகளுக்குமான மீள் கொடுப்பனவுக்குரிய ஒரு பிணையாக அதிலுள்ள அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்ட உரிமைகள், ஆதனம் மற்றும் வளவுகளை வங்கியின் பெயரில் ஈடுவைத்து ஒப்படைத்துள்ளதுடன் கூறப்பட்ட ஈட்டுமுறி மூலம் பெற்ற வசதிகளுக்காக கொடுக்கவேண்டிய மீள்கொடுப்பனவைக் கூறப்பட்ட கடன் பெற்றவர் செலுத்தத் தவறியுள்ளார்.

கூறப்பட்ட யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப மேற்குறிப்பிட்ட ஆதனத்தை அதே இடத்தில் பகிரங்க ஏல விற்பனை மூலம் 2015, மாச்சு 6 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு எம்மால் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- வென்னப்புவ நகர மத்தியிலிருந்து புறப்பட்டு கொழும்பு-புத்தளம் பிரதான வீதி வழியாக 19.7 கிலோ மீற்றர்கள் கொழும்பு நோக்கிப் பயணம் செய்து 27 ஆவது கிலோ மீற்றர்

போஸ்ட் கடந்து 200 மீற்றரில் இடதுபக்கமாக ஓல்ட் எயர்போட் வீதிக்குத் திரும்பி தொடர்ந்து 250 மீற்றர்கள் சென்று வீதியின் வலதுபக்கமுள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு முறை**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனை யாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு அறவீடுகள் ;
(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக 1,000 ரூபா ;
(6) நொத்தாரிசு கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3, தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

2-401

---

### யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீ

